முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1009

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.07.2022, திங்கட்கிழமை

1. ஞான சூட்சும குருராஜனே
ஞானவான்களை உலகில் படைக்கவேண்டி
ஞானபண்டிதன் என் சக்தியாகவே வந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 20 நாள், 04.07.2022 திங்கட்கிழமை)
வரங்கள் பெற்று கலியுகம் தன்னில்
வள்ளலாக வாழுகின்ற ஞானியே
3. ஞானியே உந்தனுக்கு ஆறுமுகன் என் சக்தி
நாளும்நாளும் ஆற்றலாக பெருகி வர
வருகவே உன் தர்மமும் சன்மார்க்கமும் வையகத்தை இருகண்களாக பாதுகாத்து வர
வருகின்ற உன் மார்க்கத்தை ஏற்று வழிமொழிந்து உலகோர் பின்தொடரதொடர
4. தொடரவே வையகத்தில் பெருமாற்றம்
தூய ஞான ஆட்சிக்காலமாக
பெருமைபட அற்புதங்கள் நடக்கக் கூடும்
பேருலகம் அரங்கன் உன் ஞான வேலிக்குள் வரும்
5. வருகவே ஆறுமுகன் யான் இந்த மாற்றத்தை
வல்லமைபட வருமுலகில் நடத்தி அருள்வேன்
அருளாக அரங்கனின் தர்மமாக
அகிலத்தார்க்கு சக்தியை ஊட்டி
6. வருமுலகில் உலகையே ஞான சித்தர் ஆட்சிக்காலமாகவும்
வாழுகின்ற மக்களெல்லாம் ஞானிகளாகவும்
ஆகவே உருமாற்றம் ஆற்றல்பட பெருக
அற்புதத்தை ஆறுமுகன் அரங்கன் உன் வழியே நடத்துவேன்
7. நடத்தவே ஓங்காரக்குடில் நோக்கி
நாளும்நாளும் உலகோர் தொடர்பு கூட்டி வர
இடரின்றி இந்த பேருலகம் பாதுகாப்பும்
எல்லா வளமும் பெற்று சிறக்கும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–